Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**C.C No. 11/2021**

Depositions of - சுமையா ..witness for ...Petitioner side witness

| | | |
|---|---|---|
| Name | - | சுமையா (PW-1 ) |
| Father's and Husband's name | - | |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28.07.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு திருமதி . G. அபிநயா, கிரேட் 3 பெஞ்ச் கிளர்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

<u>முதல் விசாரணை-</u>

நான் எர்ணம்பட்டியில் நான்கு தலைமுறையாக எங்களுக்கு சொந்தமான எர்ணம்பட்டி சுடுகாட்டு மைதானத்திற்கு அருகில் ஒரு தோட்டம் உள்ளது. அந்த தோட்டத்தில்தான் நான் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். கொரனா தொற்றுக்காலத்தில் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காலை 10.00 மணிக்கு லட்சுமணராசு எனது மருமகள் சுபிதா, எனது கணவர் முஸ்தபா நடக்க முடியாதவர் ஆகியோர்கள் இருந்தோம். என்னிடம் சுர்யா, ராஜ்குமார், அறிவானந்தம், முரளி ஆகிய நான்குபேர் எனது தோட்டத்திற்கு வந்து நுங்கை வெட்டிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களிடம் உங்களுக்கும், எங்களுக்கும் பிரச்சனை உள்ளது எதற்காக வெட்டிகிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு மேற்படி நபர்கள் போடி தேவுடியா என்ற அசிங்கமான வார்த்தைகளால் பேசி என்னை பனைமட்டையை வைத்து வலது கையில் அடித்து கையை முறித்துவிட்டார்கள். சீலையைக்கிழித்து தள்ளிவிட்டு என்னை திட்டினார்கள். பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எர்ணம்பட்டியில் வைத்து ஊசி போட்டுக்கொண்டேன். போடியில் உள்ள பார்த்தசாரதி என்ற மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். தற்போது அந்த மருத்துவர் உயிருடன் இல்லை. பின்னர் கையில் ஏற்பட்ட காயத்திற்கு பூசனம்பட்டிக்கு சென்று கட்டுப்போட்டோம். என்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று அரிவாளால் வெட்டுவேன் என்று என்னை மிரட்டினர். கடந்த 06.06.2020 ம்தேதி நான் எதிர்களுக்கு

எதிராக போடி ஊரக காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் **ம.சா.ஆ.1,** 06.06.2020ம்தேதி நான் எதிர்கள் மீது மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு நகல் **ம.சா.ஆ.2,** 22.06.2020ம்தேதி நான் எதிர்கள் மீது தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு நகல் **ம.சா.ஆ.3,** 23.06.2020ம்தேதி புகாரை தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு பதிவு தபாலில் அனுப்பிய ரசீது அசல் **ம.சா.ஆ.4**, 25.06.2020ம்தேதி தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மேற்படி புகாரை பெற்றுக்கொண்டதற்கான இணையதள ஒப்புகை அட்டை நகல் **ம.சா.ஆ.5.**

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.08.02 17:02:20 +0530